10/=

பக்கங்கள் 06

# எதிரொலி

Registered as a Newspaper in Srilanka

Ethiroli

குரல் 02 அதிர்வு 31 வியாழக்கிழமை 31 மே 2018 ethirolimedia@gmail.com 021 224 38 18

## இன்று முதல் புதிய இலங்கை

கொழும்பு, மே 31

அரச நில அளவையாளர் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட இலங்கையின் புதிய வரைப்படம் இன்று வெளியிடப்படவுள்ளது.

கொழும்பில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் துறைமுக நகரத்தை உள்ளடக்கியதனால் இலங்கையின் நிலப்பரப்பு புதிய வரைபடத்தில் 2 கிலோமீற்றரினால் அதிகரித்துள்ளதாக நில அளவை ஆணையாளர் பி.எம்.பி.உதயகாந்த தெரிவித்தார்.

இதேபோன்று மொரகஹாகந்த உள்ளிட்ட நீர்பாசனங்கள் பல இந்த வரைப் படத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1.500 என்ற அளவில் புதிய இலங்கை வரைபடம் அச்சிடப்பட்டுள்ளது. ஜூன் மாதம் நடு பகுதியில் பொது மக்களும் இதைக் கொள்வனவு செய்ய முடியும் என்றும் அவர் தெரிவித்தார். இதன் டிஜிட்டல் பதிவின் பிரதிகளை நில அளவை திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் கொள்வனவு செய்ய முடியும். (அ)

## நாமல் வழக்கு இன்றும் விசாரணை

கொழும்பு, மே 31

சட்ட விரோதமாக உழைக்கப்பட்ட 30 மில்லியன் ரூபா நிதியைப் பயன்படுத்தி கவர்ஸ் கோப்பரேட் எனும் நிறுவனத்தில் முதலீடு செய்த குற்றச்சாட்டுத் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச உள்ளிட்ட 6 பேருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது.

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நீதிபதி சம்பத் அபேகோன் 3▶



# புதிய அரசமைப்பில் தமிழர்களுக்குத் தீர்வு

### சம்பந்தன் நம்பிக்கை

கொழும்பு, மே 31

“தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு நிரந்தரமான தீர்வினை புதிய அரசியல் யாப்பினூடாகவே அடைய முடியும். புதிய அரசியல் வரைபானது நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையினால் நிறைவேற்றப் படுகின்ற போது அது சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் மக்களினால் அங்கீகரிக்கப்படும் என்ற நம்பிக்கை எமது கட்சிக்கு உள்ளது.” இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான இரா.சம்பந்தன், அமெரிக்க காங்கிரஸ் குழுவினரிடம் தெரிவித்துள்ளார். 3▶

## சம்பந்தனோடு ‘குரூப் 16’ பேச்சு

கொழும்பு, மே 31

அரசாங்கத்திலிருந்து விலகிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 16 பேரடங்கிய குழு, எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தனை சந்தித்து நேற்றுப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

கொழும்பு, ஸ்ரீமத் மாகஸ் பெர்ணான்டோ மாவத்தையிலுள்ள, எதிர்க்கட்சி தலைவர் காரியர்லயத்திலேயேச் இந்த சந்திப்பு இடம்பெற்றது. ஆயினும் இதன்போது இரு தரப்பும் பேசிக்கொண்ட விடயங்கள் தொடர்பில் எவ்வித தகவல்களும் வெளியாகவில்லை. (அ)

## ஊடகப் பணியாளர் தாக்கு: யாழ்.நகரில் ஆர்ப்பாட்டம்



யாழ்ப்பாணம், மே 31

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியாகும், காலைக்கதிர் பத்திரிகையின் பணியாளர் தாக்கப்பட்டமையை கண்டித்து நேற்றுப் புதன்கிழமை யாழ்.நகரில் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ்.ஊடகவியலாளர்களினால் யாழ். மத்திய பஸ்நிலையம் முன்பாக குறித்த போராட்டம் முன்னெடுப்பட்டது. யாழில் இருந்து வெளிவரும்காலைக்கதிர் பத்திரிகையின் விநியோகஸ்தரான செ.இராஜேந்திரன் என்பவர் மீது இனம்தெரியாத கும்பலொன்று தாக்குதல் நடத்தியதில், குறித்த ஊடகப் பணியாளர் படுகாயமடைந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

### வடமராட்சி கிழக்கு

## மீனவர்களுக்கு கொலை அச்சுறுத்தல்

யாழ்ப்பாணம், மே 31

வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த மீனவர்களுக்கு கடற்படைப் புலனாய்வாளர்களால், கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

புத்தளம் மற்றும் உடப்புப் பகுதிகளில் இருந்துவந்து வடமராட்சி கிழக்கு, தாளையடி, மருதங்கேணி, செம்பியன்பற்று பகுதிகளில், நூற்றுக்கணக்கான 3▶

## மாகாணத் தேர்தலை விரைவாக நடத்துக!

### மஹிந்த தேசப்பிரிய கோரிக்கை

கொழும்பு, மே 31

மாகாண சபைத் தேர்தலை, முடிந்தவரை விரைவாக நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய அரசியல் கட்சிகளின் தலைவர்கள், ஜனாதிபதி, பிரதமர் மற்றும் சபாநாயகர் ஆகியோரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மாகாண சபைத் தேர்தல் 3▶

### வன்னிவிளாங்குளத்தில்

## விபத்தில் இளைஞர் பலி

கிளிநொச்சி, மே 31

மாங்குளம், வன்னிவிளாங்குளம் பகுதியில் நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். அவருடன் பயணித்த இளைஞர்கள் இருவர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் 3▶

## மனிதப் புதைகுழியில் படமெடுக்கத் தடை

மன்னார், மே 31

மன்னாரில் சதொச விற்பனை நிலைய கட்டுமானப் பகுதியில் கண்டு பிடிக்கப்பட்ட மனித எச்சங்களைத் தொடர்ந்து அங்கு நடைபெறும் அகழ்வுப் பணிகளை வெளியார் எவரும் புகைப்படம் எடுக்கவோ அல்லது ஒளிப்பதிவு செய்யவோ தடை விதிக்கப்பட்டுள்ளது. செய்தியாளர்களுக்கு மட்டும் காலை 3▶

## மயிலிட்டி வீதி விரைவில் விடுவிப்பு



யாழ்ப்பாணம், மே 31

கட்டுவன், மயிலிட்டி வீதியின் ஒரு பகுதியை விடுவிக்கும் நோக்கில் புதிய தடுப்பு வேலியைப் படையினர் அமைத்து வருவதாகக் கூறப்படுகிறது. வலி.வடக்குப் பிரதேசத்தில் சில பிரதேசங்கள் மக்களின் மீள் குடியமர்வுக்காக விடுவிக்கப்பட்டபோதிலும் 3▶

## நீதியின் சூரியன் கிழக்கில் உதிப்பு

திருகோணமலை, மே 31

திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதியாக மா.இளஞ்செழியன் நேற்றுப் பொறுப்பேற்றுக் கொண்டார். இதன்போது அவருக்கு மகத்தான வரவேற்பு வழங்கப்பட்டது. ‘நீதியின் சூரியன் மீண்டும் கிழக்கில் உதயமாகிவிட்டது’ என்று நீதிபதியை மக்களும், நீதிமன்ற அலுவலர்களும், சட்டத்தரணிகளும் வரவேற்றனர். (அ)





# கோத்தாவுக்கு சவாலாக களமிறங்கத் தயார்

## பொன்சேகா அதிரடி

கொழும்பு, மே 31

ஐக்கிய தேசியக் கட்சி இணங்கினால் கோத்தபாய ராஜபக்சவுக்குச் சவாலாக, நான் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கத் தயாராக உள்ளேன் என்று சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

நல்லாட்சியின் நகர்வுகள் மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவின் அரசியல் நகர்வுகள் குறித்து, ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

"யுத்த காலத்தில் நாட்டை விட்டு வெளியேறியவர்கள், இப்போது முதுகெலும்புள்ள தலைமைத்துவம் குறித்துப் பேசுகின்றனர். கோத்தபாய ராஜபக்சவுக்கு இந்த நாட்டை ஆட்சி செய்வதற்கு எந்தத் தகுதியும் இல்லை. யுத்த காலத்தில் நாட்டை விட்டு வெளியேறி 15 ஆண்டுகளாக ஒழிந்து மறைந்து, யுத்தத்தின் பின்னர் தாம் தான் வீரர்கள் எனக் கூறிக் கொண்டுள்ள தலைவர்கள் இந்த நாட்டை ஆள்வது பொருத்தமற்றதாகும்.
கோத்தபாய ராஜபக்சவுக்கு ஆட்சி நிர்வாகத்தைப் பற்றி எதுவுமே தெரியாது. இராணுவத்தையே ஒழுங்காக வழிநடத்தத் தெரியாத, தைரியம் இல்லாதவர் நாட்டை ஆட்சி செய்யும் ஆசையில் உள்ளார்.

இப்போது தேசிய அரசாங்கம் தமது கொள்கைகளை மறந்து மீண்டும் கட்சி சார்ந்த தனிப்பட்ட அரசியல் நகர்வுகளை முன்னெடுக்கின்ற காரணத்தினால் எதிர்கால வேலைத்திட்டங்கள் தடைப்படுகின்றன. இந்த அரசாங்கத்தில் உள்ள பாரிய பிரச்சினை இதுவேயாகும். ஜனாதிபதி, பொது வேட்பாளராகக் களமிறக்கப்பட்டு வெற்றி பெற்றவர் ஆவார். அவரது வெற்றியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பங்களிப்பு மிகவும் குறைவானதாகும்.

மாறாக ஐக்கிய தேசியக் கட்சியினதும், ஏனைய கட்சிகளினதும் ஆதரவிலேயே அவர் ஜனாதிபதியானார். அவ்வாறு இருக்கையில் அவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நலன்களை மாத்திரம் கவனத்தில் கொண்டு செயற்படுவது ஒருபோதும் ஏற்றுகொள்ளப்பட முடியாத விடயமாகும்.

அதேபோன்று, அப்போதைய ஜனாதிபதி தேர்தலில் மகிந்த ராஜபக்சவுடன் இணைந்து செயற்பட்ட நபர்களுக்கே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னுரிமை வழங்கி, அவர்களுக்காக ஆட்சியைக் குழப்பும் நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளார். ஆகவே இனியாவது ஜனாதிபதி சரியான தெரிவுகளை முன்னெடுக்க வேண்டும். முதுகெலும்புள்ள தலைவர்களை உருவாக்க வேண்டும் எனச் சிலர் கூறுகின்றனர். அதனை நாமும் ஏற்றுக்கொள்கின்றோம். ஆட்சியை சரியாக முன்னெடுத்துச் செல்லக்கூடிய, தீர்மானங்களை சரியாக முன்னெடுக்கக்கூடிய முதுகெலும்புள்ள தலைவர்கள் ஆட்சிக்கு வர வேண்டும்." என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)



# நாடளாவிய ரீதியில் டெங்கு ஒழிப்பு!



கொழும்பு, மே 31

நாடளாவிய ரீதியில் டெங்கு நுளம்புகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில், அடுத்த மாதம் 7 ஆம் திகதி முதல் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

கடந்த சில வருடங்களுடன் ஒப்பிடும் போது இந்த வருடத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை குறைந்திருப்பதாகவும், இது 70 சதவீத வீழ்ச்சியாகும் எனவும் டெங்கு ஒழிப்பு தேசிய இயக்கத்தின் பணிப்பாளர் டொக்டர் ஹசித திசேரா தெரிவித்தார்.

"எனினும் கடந்த சில தினங்களாகப் பெய்த மழை காரணமாகப் புத்தளம், மட்டக்களப்பு, கல்முனை ஆகிய பிரதேசங்களில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. தற்போது நாடு பூராகவும் உள்ள வைத்தியசாலைகளில் வாரத்துக்கு சுமார் 500 டெங்கு நோயாளர்கள் சேர்க்கப்படுகின்றனர் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. ஆகவே தான் இந்த டெங்கு ஒழிப்பு வேலைதிட்டம் முன்னெடுக்கப்பட உள்ளது." என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

# சுற்றுலாப் பயணிகளுக்கு வீடுகள்

கொழும்பு, மே 31

சிங்ஹராஜவனம் உட்பட பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிகளை பார்வையிடச் செல்லும் சுற்றுலாப் பயணிகளின் நலன்கருதி வீடுகளை அமைக்க வனப் பாதுகாப்புத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

வனங்களுக்கு அருகில் வசிப்பவர்களை இணைத்து இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் உரிய பகுதிகளில் உள்ள வீடுகளை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளலாம்.

தங்கியிருக்கும் காலப்பகுதியில் வீட்டுத் தோட்டங்களில் இருந்து மரக்கறி வகைகள், பழங்கள் என்பனவற்றையும் இலவசமாக பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ஆ)

# மனித உரிமை ஆணைக்குழுவுக்கு 'ஏ' தரச் சான்றிதழ்

கொழும்பு, மே 31

மனித உரிமைகள் நிறுவனங்களின் உலகளாவிய அமைப்பால், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு 'ஏ' தரச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

அரசியல் சுதந்திரம் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் பேணப்படுகின்றமை தொடர்பில் ஆராயப்பட்டதன் பின்னரே 'ஏ' தரச்சான்றிதழ் வழங்கப்படும். அந்த வகையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு இது கிடைத்துள்ளமை நாட்டு மக்களுக்குக் கிடைத்த பாரிய வெற்றி என அதன் தலைவர் என டி.உடகம தெரிவித்துள்ளார்.

"தேசிய மனித உரிமை நிறுவனங்களின் உலகளாவிய அமைப்பாக சர்வதேச மனித உரிமைகள் நிறுவனம் (GANHRI) செயற்பட்டு வருகின்றது.

1993 ஆண்டு பரிஸ் கொள்கைக்கு இணங்க தேசிய மனித உரிமை நிறுவனம் செயற்படுகின்றதா என்பதைக் கண்காணிப்பதே இதன் பிரதான கடப்பாடாகும். இந்தக் கொள்கை ஐ.நா பொது சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டு உலகளாவியத் தரமாக பேணப்பட்டு வருகின்றது.

இந்த வருடம் ஜனவரி மாதம் 120 தேசிய மனித உரிமைகள் நிறுவனங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தன. எனினும் , 77 நிறுவனங்களுக்கு மாத்திரமே "ஏ" தரச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. இலங்கை தவிர இந்தியா மற்றும் நேபாளம் உள்ளிட்ட தெற்காசிய நாடுகளுக்கும் "ஏ" சான்றிதழ் கிடைக்கப்பெற்றுள்ளன. ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் 15 நாடுகளின் நிறுவனங்கள் முதற்தர சான்றிதழைப் பெற்றுள்ளன.

19 ஆம் அரசியலமைப்பு சீர் திருத்தின் மூலம் இரண்டரை வருடங்களாக சுயாதீன ஆணைக்குழுவாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிறுவனம் என்ற முறையில் மட்டுமல்லாது, இது நாட்டு மக்களுக்கு கிடைத்த பாரிய வெற்றியாகும். இதன் மூலம் ஆணைக்குழு மேலும் நுணுக்கமாகவும் சிறப்பாகவும் செயற்பட உள்ளது." என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

# போராட்டத்தில் குதித்தனர் உன்னிச்சை விவசாயிகள்





மட்டக்களப்பு, மே 31

மட்டக்களப்பு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் செயற்பாடுகளைக் கண்டித்து, உன்னிச்சைக் குளம் நீர்ப்பாசனத் திட்ட விவசாயிகள் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

இந்தப் போராட்டம் மட்டக்களப்பு வாவிக்கரை வீதியில் நேற்று இடம்பெற்றது.

இதில், உன்னிச்சை நீர்ப்பாசனத்துக்குட்பட்ட பகுதிகளில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடும் நூற்றுக்கணக்கான விவசாயிகளும், விவசாயக் குடும்பங்களும் கலந்து கொண்டனர்.

வாவிக்கரை வீதியில் ஆரம்பமான இந்தப் போராட்டம் அந்தோனியார் ஆலய வீதியூடாக மட்டக்களப்பு மாவட்டச் செயலகம் வரைச் சென்றது. அத்துடன், அங்கு மாவட்ட அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இதன்போது, குறித்த நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கு எதிரான சுலோகங்களைக் கொண்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டக்காரர்கள் கோஷங்களை எழுப்பினர்.

"நாட்டில் நிலவி வரும் சீரற்ற காலநிலை காரணமாக உன்னிச்சைக் குளத்தின் வான் கதவுகள் கடந்த 24 ஆம் திகதி திறந்து விடப்பட்டன. இதனால், உன்னிச்சை நீர்ப்பாசனக் குளத்தை அண்டிய சுமார் 6 ஆயிரம் ஏக்கர் வயல் நிலங்கள் அழிவடைந்துள்ளன. உன்னிச்சைக் குளத்தை சிறந்த முறையில் நீர்ப்பாசனத் திணைக்களம் முகாமைத்துவம் செய்யாத காரணத்தினாலேயே இந்த அழிவு ஏற்பட்டது. எமக்கான நிவாரணங்களை உரியவர்கள் பெற்றுக்கொடுக்க வேண்டும் . " என்று பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவித்தனர். (ஆ)

எதிரொலி Ethiroli
வியாழன். 31 மே 2018 ethirolimedia@gmail.com

## யதார்த்தம் இதுதான்

போர் முடிந்து இன்னமும் எத்தனை பேர் கொல்லப்பட்டார்கள் என்றே தெரியாத ஒரு மண்ணில் இன்றைக்கும் கோடிக்கணக்கில் பணத்தை கொட்டி கோயில் கும்பாபிஷேகம் நடத்துகின்ற ஒரு இனமாக திமிரோடு நிற்பதும் –

ஒரு இனத்தின் மிகப்பெரிய விடுதலைக்காக போராடிய அமைப்பின் போராளிகள் இன்னமும் சமூகத்தின் தீண்டப்படாதவர்களாக நடத்தப்படுகின்ற மண்ணில் அவர்களிலும் பார்க்க மேலான கடவுள் தமக்குள்ளார்கள் என்று அதே மண்ணில் காவடிகள் எடுக்கும் பக்திமான்கள் வாழ்வதும் –

தமிழர் தாயகத்தில் மாத்திரம்தான் சாத்தியமாகிக்கிடக்கிறது.

ஈழத்திலுள்ள சைவ நம்பிக்கையும் அதற்காக எமது மக்கள் காண்பிக்கும் வெறித்தனமான பக்தியும் இந்தியாவின் ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்களின் அட்டகாசங்களைவிட பயங்கரமானது. ஆனால், அந்த அரியண்டங்களிலிருந்து ஈழத்தின் மத நம்பிக்கை தனித்து தெரிவதற்கு காரணம், சைவர்கள் பிற மதங்களின் மீது ஆக்கிரமிப்பு செய்வதில்லை என்பதே. பிற மதங்களின் மீது வன்முறைகளில் இறங்குவதில்லை. தங்களது வெறித்தனமான பக்தியை கலாசார அடையாளமாகவும் பண்பாட்டுக்கூறாகவும் காலம் காலமாக பேணிவருவதால் பெரியளவிலான வரலாற்று பாதகங்கள் எதுவும் நிகழவில்லை. வேறு வகையில் சொல்லப்போனால், ஈழத்திலுள்ள சமய நம்பிக்கை – பிற மதங்களை காயப்படுத்தாத – இராஜதந்திர ரீதியான பக்தியில் நிலைநிற்கிறது. அது எமது மக்களுக்குள் கலந்து கிடக்கும் வடிவமே வேறு.

இந்த மத நம்பிக்கையானது பன்னெடுங் காலமாக மக்களாலேயே வரைவிலக்கணப் படுத்தப்பட்டு ஊறிப்போய் கிடப்பதும் சமரசம் செய்யமுடியாத அகவயமான கூறுகளோடு பயணிப்பதும் எம்மினத்தில் அமிழ்ந்து கிடக்கும் அதிசயங்களில் ஒன்று.

தமிழர் தாயகம் இந்து மதத்தினை தங்களின் மீது திணிக்கப்படுகின்ற அடையாள அழிப்புக்கு எதிரான கருவியாகப் சைவ பயன்படுத் துவதற்கு நினைத்திருந்தால் அது எப்பவோ நடந்திருக்கும். அது அன்றைக்கும் நடக்கவில்லை. இன்றைக்கும் நடக்கவில்லை. என்றைக்கும் நடக்கப்போவதில்லை.

தமிழ்த் தேசிய விடுதலைப்போராட்டத்தின் பலமே அதுதான். தமிழ்த் தேசியத்திலிருந்து எந்த மதத்தினை தூக்கி வெளியே போட்டாலும் அது போராட்டத்திற்கு எந்த பங்கத்தையும் ஏற்படுத்தாது.

ஆனால், சிங்கள தேசியத்திலிருந்து பௌத்தத்தினை தூக்கி வெளியில் போட்டுப்பாருங்கள். அவர்களது தேசியம் சிரிக்கத்தொடங்கிவிடும்.

இதை புரிந்துகொள்ளாதவர்களே விகாரைகளுக்கு எதிராகப் போராடாமல், மதவாத வாளைக் கையில் ஏந்திக் கொண்டுள்ளனர். ஏதோ மக்களுக்கு காணிகளை விடுவிக்கப் போவதாகப் படம் காட்டிவிட்டு, நல்லூர் றியோவில் ஐஸ்கிறீமை குடித்து விட்டுப் பறந்துப்போன ரணிலுக்கு எதிராக, இவர்களைப் போராடச் சொன்னால் அதற்குச் சம்மதிக்க மாட்டார்கள். ஏனெனில் அதிகாரத்துக்கு எதிராகவும் அதிகார மதத்துக்கு எதிராகவும் போராட இவர்களுக்குத் தெரியாது. இப்படியானவர்களுக்கு ரணிலின் காலை நக்கி விடத் தெரியுமே தவிர, அதிகாரத்தை எதிர்க்கத் தெம்பில்லை என்பதே யதார்த்தம்.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# தொடர்ச்சிகள்

### புதிய... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள, மக்கிலேனென் தொன்பெர்ரி தலைமையிலான அமெரிக்க காங்கிரஸ் குழுவினரை கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் நேற்றுச் சந்தித்தார். இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"சிங்களத் தலைவர்கள் நாட்டு மக்களை நியாயமாகவும், சமத்துவமாகவும் நோக்குவதனை விடுத்து கடும்போக்காளர்களைத் திருப்திப்படுத்துவதிலேயே ஆர்வமாக உள்ளனர். அவர்கள் இதேவழியையே பின்பற்றினால் நாடு மீண்டும் பின்னோக்கி செல்லும் அபாயம் ஏற்படும்.ஜனாதிபதியும் பிரதமரும் இதய சுத்தியுடன் சிங்கள மக்களிடம் சென்று புதிய அரசியல் யாப்புக்கான தேவையினை எடுத்துச் சொல்ல வேண்டும். ஒவ்வொரு அரசாங்கமும் ஜனாதிபதியும் இது தொடர்பில் முயற்சிகளை எடுத்து வந்துள்ளமையினால் இந்த விடயங்களை விளங்கிக்கொள்வதில் சிங்கள மக்களுக்குச் சிரமம் இருக்காது. நாம் பிளவுபடாத பிரிக்கமுடியாத ஒருமித்த நாட்டுக்குள்ளேயே ஒரு தீர்வினை எதிர்பார்க்கிறோம் . அதிகாரப்பகிர்வானது சர்வதேசஉடன்படிக்கைகளான சிவில் மற்றும் அரசியல் உரிமைகள், பொருளாதார சமூக கலாசார உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கை, சர்வதேச மனித உரிமைகள் சாசனம் போன்றவற்றின் அடிப்படையிலேயே அமைய வேண்டும்.

தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு நிரந்தரமான தீர்வினை புதிய அரசியல் யாப்பினுடாகவே அடைய முடியும்.புதிய அரசியல் வரைபானது நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையினால் நிறைவேற்றப்படுகின்ற போது அது சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் மக்களினால் அங்கீகரிக்கப்படும் என்ற நம்பிக்கை எமது கட்சிக்கு உள்ளது.

குறிப்பிட்ட கால எல்லைக்குள் சில விடயங்கள் இடம்பெறாமல் போகின்றபட்சத்தில், நாமும் தமிழ் மக்களும் எமது நிலைப்பாடு குறித்து மீளாய்வு செய்ய நிர்ப்பந்திக்கப்படுவோம் .இலங்கை அரசாங்கமானது 2015இல் ஐ.நா மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தினை மார்ச் 2019இற்குள் முழுமையாக நிறைவேற்றுவதாக வாக்குறுதி அளித்துள்ளது. அப்படி நிறைவேற்றுவதாக இருந்தால் சில விடயங்கள் துரித கதியில் இடம்பெற வேண்டும்.

ஐ. நா. மனித உரிமை பேரவை தீர்மானத்தினை அடிப்படையாக கொண்டு இலங்கை தொடர்பில் தமது நிலைப்பாட்டினை சர்வதேச சமூகமும் தெளிவுபடுத்த வேண்டும். இலங்கை அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகள் கடைபிடிக்கப்பட்டு நிறைவேற்றப்படுவதனை சர்வதேச சமூகம் உறுதி செய்ய வேண்டும் .

சர்வதேச சமூகம் இலங்கை தொடர்பில் வெறும் பார்வையாளராக மாத்திரம் இருக்க முடியாது.இலங்கை அரசு தமது வாக்குறுதிகளை நிறைவேற்றாது போகும் பட்சத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் பாதுகாப்பினை உறுதி செய்வதிலும் மீள் நிகழாமையை உறுதி செய்வதிலும் சர்வதேச சமூகத்தின் அணுகுமுறை எவ்வாறு இருக்கும் என்பதனையும் வலியுறுத்த வேண்டும்" என்றும் அவர் இதன்போது தெரிவித்தார்.

சுமார் 45 நிமிடங்கள் நீடித்த இந்தக் கலந்துரையாடலில் அமெரிக்க காங்கிரஸ் குழுவின் தலைவர் மக்கிலேனென் தோன்பெர்ரி காங்கிரஸ் உறுப்பினர்களான என்றிக் குலார், விக்கி ஹாஸ்லேர், கரோல் ஷி போர்ட்டர் மற்றும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கேஷாப் ஆகியோரும் பங்கேற்றனர். (அ)

### மனிதப்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாலை இரு வேளையில், குறிப்பிட்ட நேரத்தில் புகைப்படம் எடுக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மன்னார் நகரில் சதொச விற்பனை நிலைய கட்டுமானப் பகுதியின்போது கண்டு பிடிக்கப்பட்ட மனித எச்சங்களைத் தொடர்ந்து அங்கு அகழ்வுப் பணிகள் மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி ஆ.கி.அலெக்ஸ்ராஜா முன்னிலையில் சட்ட வைத்திய அதிகாரி டபிள்யூ.ஆர்.ஏ.எஸ்.ராஜபக்ச தலைமையில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

"நாங்கள் அகழ்வு செய்யும் பணியை மிகவும் பொறுப்புடன் செயற்படுத்த வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

ஆனால் தேவையற்றவர்கள் இங்கு புகைப்படங்கள் எடுத்து முகநூலில் பதிவு செய்து விமர்சனங்கள் வெளியிடும் பட்சத்தில் சில சமயம் மக்கள் மத்தியில் தவறான விடயங்கள் போய் ச்சேரக்கூடிய வாய்ப்புக்கள் தோன்றலாம்.

ஆகவே இங்கு அகழ்வு ப்பணியில் கடமைபுரியும் அதிகாரிகளை தவிர்ந்த எவரும் புகைப்படங்கள் எடுப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஆனால் ஊடகவியலாளர்கள் மட்டும் காலையும் மாலையும் குறிக்கப்பட்ட நேரங்களிலும், மிக முக்கியமான விடயம் கண்டுபிடிக்கப்படும் சந்தர்ப்பங்களிலும் புகைப்படங்கள் எடுப்பதற்கு அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது" என்று அகழ்வுப் பணிக்கு பொறுப்பாகவுள்ள சட்ட வைத்திய அதிகாரி டபிள்யூ. ஆர்.ஏ.எஸ்.ராஜபக்ச தெரிவித்தார்.(அ)

### மாகாணத்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில் அவர் அவர்களுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே, அவர் இந்த விடயத்தை வலியுறுத்தியுள்ளார்.

"சப்ரகமுவ, வட மத்திய மற்றும் கிழக்கு ஆகிய மாகாண சபைகளின் பதவிக்காலம் முடிவடைந்துள்ளது. எனினும் தேர்தல் முறை மாற்றம் காரணமாக அந்தச் சபைகளுக்கு இதுவரை தேர்தல் நடத்தப்படவில்லை.

ஆயினும் வடமேல், மத்திய மற்றும் மத்திய மாகாண சபைகளுக்கானத் தேர்தல் இந்த வருட இறுதியில் நடைபெறவுள்ளது.

மேலும் எஞ்சியுள்ள மூன்று மாகாண சபைகளின் பதவிக்காலமும் விரைவில் முடிவுக்கு வரவுள்ளது. எனவே சகல மாகாண சபைகளுக்குமான தேர்தலை விரைந்து நடத்த ஆவன செய்யுமாறு ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர் ஆகியோருக்கு கடிதம் அனுப்பியுள்ளேன்" எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார். (அ)

### மயிலிட்டி... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவற்றுக்குச் செல்லும் முக்கிய வீதிகள் தொடர்ந்தும் படையினரின் கட்டுப்பாட்டுள்ளேயே இருந்தன.

குறிப்பாக கட்டுவன் சந்தியில் இருந்து மயிலிட்டிக்குச் செல்லும் பிரதான வீதியின் சில மீற்றர் தூரம் விடுவிக்கப்பட்ட போதிலும் பல மீற்றர் தூர வீதி படையினரின் ஆக்கிரப்பிலேயே காணப்பட்டது. இதுகுறித்து கடுமையான விமர்சனங்கள் எழுந்துள்ள நிலையில், விடுவிக்கப்பட்டபகுதிக்குள் மக்கள் இலகுவாக சென்று வர அனுமதிக்கும் வகையில், தமது முட்கம்பியிலான பாதுகாப்பு வேலிகளை, தற்போதைய நிலைகளில் இருந்து 50 மீற்றர் பின்னோக்கி நகர்த்தும் நடவடிக்கைகளைப் படையினர் ஆரம்பித்துள்ளனர்.

இதன் மூலம் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள 450 மீற்றர் நீளமான வீதி விரைவில் விடுவிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ)

### மீனவர்களுக்கு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாடிகளை அமைத்து தென்பகுதி மீனவர்கள் கடலட்டைகளைப் பிடித்து வருகின்றனர். இதற்கு எதிராக வடமராட்சி கிழக்குமீனவர்கள் ஆர்ப்பாட்ட மொன்றை மேற்கொண்டிருந்தனர். குறித்த போராட்டத்தை நடத்தியவர்களுக்கே தற்போது தொலை பேசி மூலமாகக் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

" வெள்ளை வானில் ஏற்றுவோம், 4 ஆம் மாடியைப் பார்க்க ஆசையாக இருக்கிறதா? எனக் கேட்டு கடற்படைப் புலனாய்வாளர்கள் அச்சுறுத்தினர்" என மீனவர்கள், மருதங்கேணிப் பிரதேச செயலகத்தில் இடம் பெற்ற சந்திப்பின் போது, பிரதேச செயலருக்குத் தெரிவித்துள்ளனர். (அ)

### வன்னிவிளாங்குள... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தனர். இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்றது. "மூவர் ஒரு மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளனர். மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டையிழந்து மதகுடன் மோதுண்டு விபத்துக்குள்ளா கியுள்ளது. மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றவர்சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். (அ)

### நாமல்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னிலையில் இந்த வழக்கு விசாரிக்கப்பட்டது.

இதன்போது அரச தரப்பு பிரதி சொலிசிஸ்டர் ஜெனரல் துசித் முதலிகேயின் நெறிப்படுத்தலில் பொஸ்டன் கெப்பிடல் எனும் நிறுவனத்தின் தலைவரிடம் சாட்சி பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர், பிரதிவாதி சார்பான சட்டத்தரணியால் குறுக்கு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தக் குறுக்கு விசாரணையின் போது, முன்னதாக இரகசியப் பொலிஸாருக்கு வழங்கிய 05 வாக்குமூலங்களில் இரண்டு பொய்யானது என்று சாட்சியாளர் ஏற்றுக் கொண்டுள்ளார். இதனையடுத்து மேலதிக குறுக்கு விசாரணை நடவடிக்கை இன்று வரை ஒத்தி வைக்கப்பட்டது.(அ)

## இன்று நாளும் கோளும்

31.05.2018 வியாழக்கிழமை விளம்பி வருடம் வைகாசி மாதம் 17 ஆம் நாள்

துதியை 11.27 வரை | மூலம் முழுவதும் | குளிகை மு.ப. 09.00-10.30

இராகுகாலம் 01.30- 03.00 | சுபநேரம் காலை 10.30 - 11.30 | எமகண்டம் 06.00 - 07.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மேன்மை | சாதனை | ஆதாயம் | சுகம் | வெற்றி | ஆதரவு | புகழ் | அமைதி | நட்பு | உயர்வு | சுகம் | பக்தி |

## நொயார் கடத்தல்: அமலுக்கு மறியல் நீடிப்பு!

கொழும்பு, மே 31

ஊடகவியலாளர் கீத் நொயார் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இராணுவப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் ஓய்வுப்பெற்ற பணிப்பாளர் மேஜர் ஜெனரல் அமல் குணசேகரவின் விளக்கமறியல் எதிர்வரும் 13ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கல்கிஸ்ஸ நீதிவான் நீதிமன்றில் நேற்று இவரை ஆஜர்படுத்தியபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2008ஆம் ஆண்டு ஊடகவியலாளர் கீத் நொயர் கடத்தப்பட்ட சம்பவத்தில், அதற்கு உடந்தையாக இருந்த குற்றச்சாட்டில், குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் அவர் கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# மாகாணசபை தேர்தலை மிக விரைவாக நடத்துக

## தேசப்பிரிய வேண்டுகோள்



கொழும்பு, மே 31

மாகாணசபைத் தேர்தலை முடிந்தவரை மிக விரைவாக நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி, பிரதமர், அரசியல் கட்சிகளின் தலைவர்கள், மற்றும் சபாநாயகர் ஆகியோரிடம் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் அவர், அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே இந்த விடயத்தை வலியுறுத்தியுள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் நடைபெறும் கூட்டங்களில் பங்கேற்குமாறு எதிர்க் கட்சித் தலைவர் மற்றும் கட்சியின் பிரதிநிதிகளுக்கு தாம் கடிதம் மூலம் அழைப்பு விடுக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சப்பிரகமுவ, வட மத்திய மற்றும் கிழக்கு ஆகிய மாகாணசபைகளின் பதவிக்காலம் நேற்று முன்தினத்துடன் முடிவடைந்துள்ளன. எனினும், தேர்தல் முறை மாற்றம் காரணமாக அந்த சபைகளுக்கு இதுவரை தேர்தல் நடத்தப்படவில்லை. எவ்வாறெனினும் வடமேல், மத்திய மற்றும் மத்திய மாகாண சபைகளுக்கான தேர்தல் இந்த வருட இறுதியில் நடைபெற உள்ளது.

மேலும், எஞ்சியுள்ள மூன்று மாகாண சபைகளின் பதவிக்காலம் அடுத்த வருடம் முடிவடைய உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

## இலங்கையின் புதிய வரைபடம்!

கொழும்பு, மே 31

அரச நில அளவையாளர் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்டுள்ள இலங்கையின் புதிய வரைப்படம் இன்று வெளியிடப்பட உள்ளது.

கொழும்பில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் துறைமுக நகரத்தை உள்ளடக்கியதனால், இலங்கையின் நிலப்பரப்பு 2 கிலோமீற்றரால் அதிகரித்துள்ளதாக நில அளவை ஆணையாளர் பி.எம்.பி.உதயகாந்த தெரிவித்தார்.

"இதேபோன்று மொரகஹாகந்த உள்ளிட்ட நீர்பாசனங்கள் பல இந்த வரைப்படத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. 1.500 என்ற அளவில் புதிய இலங்கை வரைபடம் அச்சிடப்பட்டுள்ளது. அடுத்த மாத நடுப் பகுதியில் பொது மக்களுக்கு இதைக் கொள்வனவு செய்ய முடியும். இதன், டிஜிட்டல் பதிவின் பிரதிகளை நில அளவைத் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் கொள்வனவு செய்ய முடியும்." என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

## நீர்வீழ்ச்சியில் இளைஞனின் சடலம் மீட்பு



பம்பரகந்த, மே 31


பம்பரகந்த நீர்வீழ்ச்சியில் நேற்று முன்தினம் மாலை விழுந்து உயிரிழந்த இளைஞனின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக ஹல்தும்முல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நீர்வீழ்ச்சியைப் பார்வையிடுவதற்காகச் சென்ற இளைஞன் திடீரென நீர்வீழ்ச்சியில் குதித்துள்ளார். இதனையடுத்து, பிரதேசவாசிகளும் பொலிஸாரும் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது, உயிரிழந்தவரின் சடலம் மீட்கப்பட்டது.

தங்கொட்டுவப் பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதான சனோஜ் மிஹிரங்க என்ற இளைஞனே உயிரிழந்தவர் ஆவார்.

குறித்த இளைஞன், மோட்டார் சைக்கிளில் பம்பரகந்தைப் பகுதிக்கு வந்துள்ளார். நீர்வீழ்ச்சிக்கு அருகிலுள்ள மண் பாதை ஒன்றில் தன்னுடைய கைபேசி மற்றும் பேர்ஸ் என்பவற்றை வைத்துவிட்டு நீர்வீழ்ச்சியில் குதித்துள்ளார் என்று பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த இளைஞனுடைய பெற்றோர் பிரிந்து, மறுமணம் முடித்து வாழ்கின்ற நிலையில், இளைஞர் தனது சகோதர உறவுமுறையான ஒருவருடன் வசித்து வந்ததாகத் தெரியவந்துள்ளது. (ஆ)



## சிமெந்து வழங்கல்

யாழ்ப்பாணம், மே 31

வடமாகாணசபை உறுப்பினர் சிவக்கொழுந்து அகிலதாஸின் 2018 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதியில், வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களுக்கும், 8 லட்சம் ரூபா பெறுமதியான சிமெந்து பைக்கற்றுக்கள் வழங்கி வைக்கப்பட்டன. இந்த நிகழ்வில் கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேசசபை தவிசாளர் த.ஐங்கரன், செயலாளர் அ.வினோராஜ் ஆகியோர் கலந்துகொண்டனர். (அ-11)

## திருட்டு ராணி சிக்கினார்!



தம்புள்ள, மே 31

ஆபத்துக்கு உதவும் போர்வையில் பெண் ஒருவரை ஏமாற்றிப் பணம் மற்றும் நகைகளைத் திருடிய சந்தேகத்தின் பேரில் தம்புள்ள பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட பெண் ஒருவர், கொழும்பின் பல பிரதேசங்களிலும் இடம்பெற்ற தங்க நகை மற்றும் பணம் பறித்தல் போன்ற 18 சம்பவங்களுடன் தொடர்புபட்டவர் எனத் தெரியவந்துள்ளது.

குறித்த பெண், மேலும் சில குழுக்களுடன் இணைந்து இந்த மோசடிகளில் ஈடுபட்டாரா என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இவர் பிளியந்தலைப் பகுதியைச் சேர்ந்த 38 வயதானவர் எனவும், கனடாவில் வசிப்பதாகவும் தெரிவித்து, தம்புள்ள - இனாமலுவ பிரதேசத்தில் உள்ள பெண்ணை ஏமாற்றி, அவரிடமிருந்த சங்கிலியைத் திருடியுள்ளார். இதனை அடுத்தே பொலிஸாரால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நாட்டின் பல பிரதேசங்களிலும் இந்தப் பெண் இவ்வாறான திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளமை ஆரம்பக் கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குறித்த பெண்ணின் கணவர், போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானர் எனவும், அவரே இந்தப் பெண்ணுக்குத் திருட்டு மற்றும் ஏமாற்றிப் பணம் பறித்தல் குறித்துப் பயிற்சி அளித்ததாகவும் சந்தேகநபரான பெண் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். (ஆ)

# 8,000 வீடுகளை வழங்கத் திட்டம்

கொழும்பு, மே 31

இரண்டு வருடங்களுக்குள் 8 ஆயிரத்து 903 வீடுகளை மக்களுக்கு வழங்கத் திட்டமிட்டுள்ளதாகப் பெருநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

"இந்த வீடுகள் 2019 ஆம் ஆண்டு இறுதிக்குள் சுமார் 4 ஆயிரத்து 451 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட உள்ளது. 14 வீடமைப்புத் திட்டங்களின் நிர்மாணப் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக, தற்சமயம் 4 ஆயிரத்து 952 கோடி ரூபா செலவில் 9 ஆயிரத்து 904 வீடுகள் நிர்மாணிக்கப்பட உள்ளன." என்றும் பெருநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது. (ஆ)



## உலக சுற்றாடல் தினம்: வவுனியாவில் பேரணி

வவுனியா, மே 31

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு வவுனியாவில் விழிப்புணர்வுப் பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் பேரணி வவுனியா மத்திய சுற்றாடல் அதிகாரசபை, நகரசபை மற்றும் கமநல அபிவிருத்தி திணைக்களம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் இருந்து ஆரம்பமான இந்த விழிப்புணர்வுப் பேரணி, மணிக்கூட்டுச்சந்தி வழியாக வைரவப்புளியங்குளத்தை வந்தடைந்தது. தொடர்ந்து அங்குள்ள வீடுகளுக்குச் சென்ற பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும் கழிவுப்பொருட்களைப் பிரித்து அதனைச் சுத்திகரிப்பது தொடர்பான பிரசாரத்தில் ஈடுபட்டனர்.

இந்த நிகழ்வில் கூமாங்குளம் சித்திவிநாயகர் பாடசாலை, இலங்கைத் திருச்சபை தமிழ்க் கலவன் பாடசாலை, சைவப்பிரகாசா மகளிர் கல்லூரி, இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி, வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஆ)

# பூரண அதிகாரம் வழங்கப்படவில்லை

## வசந்த சேனாநாயக்க ஆதங்கம்





பொலனறுவை, மே 31


பூரண அதிகாரம் வழங்கப்படாமையின் காரணமாக மக்களுக்கான பணிகளை முன்னெடுப்பதில் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது என்று இராஜாங்க அமைச்சர் வசந்த சேனாநாயக்க தெரிவித்தார்.

செமட்ட செவன வீடமைப்புத் திட்டத்தின் கீழ், பொலனறுவை-அரலகன்வில வெஹேரகல பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட உள்ள 25 வீடுகளை கொண்ட வீடமைப்புத் தொகுதிக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு, நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துக் கொண்டு உரையாற்றும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

“ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தலைமையிலான அமைச்சரவையினால் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஆயினும், தனிப்பட்ட ரீதியில் எனது கைகள் கட்டப்பட்டுள்ளன. எண்ணால்முடிந்த சேவையை மக்களுக்காக ஆற்றுவேன். பணிகளை முன்னெடுப்பதில் சிரமங்கள் காணப்படுகின்றன. பணிகளை நிறைவேற்ற பூரண அதிகாரம் எனக்கு இன்னும் வழங்கப்படவில்லை. இதனையே நான் அப்போதும் தெரிவித்தேன். இப்போதும் தெரிவிக்கின்றேன் .

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவால் வீடமைப்பு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அவரது எண்ணக்கருவுக்கு அமையத் தொடர்ச்சியாக இந்த செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. பொலனறுவை மாவட்டத்தில் இதுவரை காலம் முன்னெடுக்கப்படாத அபிவிருத்தித் திட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன்.” என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

# ராஜிதவுக்கு வரவேற்பு



கொழும்பு, மே 31

உலக சுகாதார ஸ்தாபனத்தின் உபதலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள, சுகாதாரப் போஷாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் டொக்டர் ராஜித சேனாரத்னவை வரவேற்கும் நிகழ்வு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நேற்று இடம்பெற்றது.

சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு இதனை ஒழுங்கு செய்திருந்தது.

சுவிட்ஸர்லாந்தின் ஜெனிவா நகரில் இடம்பெற்ற உலக சுகாதார ஸ்தாபனத்தின் நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தில், ஸ்தாபனத்தின் உபதலைவர் பதவிக்கு அமைச்சர் ராஜித சேனாரத்ன போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# உடப்பு, ஆனமடுவுக்கு படகுச் சேவை

உடப்பு , மே 31

உடப்பு மற்றும் ஆனமடு கிராமங்களில் மக்கள் பயணம் செய்வதற்காக கடற்படையினரால் படகு சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அண்மையில் ஏற்பட்ட மழை காரணமாக முந்தல் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஐந்து கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய சுமார் 10 கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால், இந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் வெள்ளநீர் வடிந்தோடாமையின் காரணமாகப் போக்குவரத்துச் செய்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி உள்ளனர். எனவே பொது மக்களின்போக்குவரத்து நடவடிக்கைகளை இலகுவாக்கும் நோக்கத்திலேயே இந்தப் படகு சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

100 வருடங்கள் பழைமையான குறித்த கிராமங்களில் வசிக்கும் மக்கள், மழைக்காலங்களில் இவ்வாறான பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதாகத்தெரிவிக்கப்படுகிறது.

அதிகாலை 5.30 மணிமுதல் இரவு 8.30 வரை இந்தப் படகுச் சேவை இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# மழையால் பாதிக்கப்பட்டோருக்கு நிதியுதவி







யாழ்ப்பாணம், மே 31

அண்மையில் பெய்த மழை காரணமாக பாதிக்கப்பட்ட 6 பயனாளிகளுக்கு, குடிசைப் புனரமைப்புக்காக வடக்கு மாகாண சமூகசேவைத் திணைக்களத்தால் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

இதன்போது, 10 ஆயிரம் ரூபா நிதி முதலாம் கட்டக் கொடுப்பனவாக வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில் பிரதேச செயலாளர் தயாரூபன், உதவி பிரதேச செயலாளர் ரஜீவ் , சமூக சேவை அலுவலர் வரதபாஸ்கரன், 'கிராம அலுவலர் சிவதர்சன் , பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஆ-11)

# ஆரைத்தான் நம்பிறதோ இந்தப் பேதையள் நெஞ்சம்?

உது ஒரு மனுசன் செய்யிற வேலையோ? எண்டு தான் கேக்கிறன். சரி நீ வாறாய் எண்டு கேள்விப்பட்டிட்டு இரவிரவா இருந்து எழுதினவை ஒரு பக்கம். எழுதத் தெரியாதவை நாலைஞ்சு கட்டை போய் எழுதத் தெரிஞ்சவையைக் கொண்டுவிச்சு எழுதிக் கொண்டு வந்து பக்குவமா ஒரு என்வலப்பை வேண்டி மடிப்புக் குலையாமல் அதை வைச்சுக் கொண்டு வந்து தர நீ என்ன செய்யிறாய்? அந்தக் காயிதங்களை வேண்டிக் கானுக்கை போட்டிட்டுப் போறாய். அப்ப நீ ஒரு மனுசனோ? உன்னை நாங்கள் ஒரு மனுசன் எண்டு மதிக்கலாமோ? ஒரு எதிரி கூடஉதைச் செய்யான். படிக்காத முட்டாள் எண்டால் கூடப் பக்குவமா வாங்கிக் கொண்டு போய் படிக்கத் தெரிஞ்சவையளைக் கொண்டு வாசிச்சுப் பாப்பன். உதவி செய்யாட்டிலும் பரவாயில்லை. என்ன எழுதிக்கிடக்கெண்டு கூடப் பாத்திருக்கலாம். அதைக் கூடச் செய்யாமல் கிழிச்சுத் துலையிலை போட்டு விட்டுப் போனியே சண்டாளா! அதைப் பாத்த சனத்துக்கு நெஞ்சு எரியும் எண்டு கூட உனக்குத் தெரியாதோ? றியோவிலை ருசியான ஐஸ்கிறீம் விக்கிது எண்டு அறிஞ்ச உனக்குச் சனத்தின்ரை நீட்டு முடக்குத் தெரியாமல் போனதுதான் பெரிய மாயமாக்கிடக்கு.

நீ உன்ரை கட்சியிலை இருந்து ஜனாதிபதியாகிச் செத்த பிரேமதாஸாவைப் பற்றிக் கேள்விப்பட்டனியோ தெரியாது. அந்தாள் லெவரியா வித்துத்தான் பிழைச்சுப் படிப்படியா வந்து ஜனாதிபதியானவர். அந்தாள் சாகிற வரைக்கும் ஒவ்வொரு நாளும் காலமை நாலு மணிக்கு எழும்பி குளிச்சு வெளிக்கிட்டு கதிரையிலை சனத்துக்காகக் காத்திருப்பாராம். சனம் வந்து கியூவிலை நிண்டு ஒவ்வொருதராப் போய் அவருக்குத் தாங்கள் கொண்டு வந்த காயிதத்தைக் குடிப்பினமாம். அவர் ஒவ்வொண்டாப் பாத்து அப்பவே சொல்லுவராம் அவை கேட்டதைச் செய்யேலுமோ, செய்யேலாதோ எண்டு. ஆனால் பெரும்பாலும் செய்து குடுத்தவராம். அப்ப அப்பிடிப்பட்ட ஒராளின்ரை கட்சியிலை வந்து இப்ப பிரதமரா இருக்கிற உனக்கு உந்த ஒழுக்கந்தெரியாதோ? எட எப்பிடி உனக்குக் கிழிச்சுப் போட்டுப் போட மனம் வந்திது.

ஒரு நாட்டின்ரை பிரதமரா இருக்கிற உனக்குத் தெரிய வேணும் நல்லது கெட்டது என்ன எண்டு. உனக்குக் கீழை இருக்கிற ஒரு அதிகாரி உப்பிடிச் செய்தால் திருத்திற இடத்திலை இருக்கி நீ உப்பிடிச் செய்யலாமோ? இனி உன்னைப் பாத்து இருக்கிற அதிகாரியளும் உப்பிடிச் சனம் குடுக்கிற காயிதங்களை எறிஞ்சுபோட்டுப் போனால் சனத்தின்ரை கெதி என்னவாகும்? அவைக்குத் தீர்வைக் குடுக்கிறது ஆர்? சனத்தின்ரை வோட்டை வேண்டித்தானே பிரதமரா வந்தனீ. அப்ப சனத்துக்கு ஆசுவாசமான ஆளா இருக்க வேணுமே ஒழிய சனத்தின்ரை நம்பிக்கையைக் கெடுக்கிற மாதிரி நடக்கப்பிடாது. அப்ப அடுத்த முறை எலக்சன் கேக்கிற நோக்கம் இல்லைப்போலை. இந்த முறையோடை வறுகிறதை வறுகிப் போட்டுப் போவம் எண்ட நினைப்போ தெரியாது.

சனமும் பாவம். அரசியல்வாதியளின்ரை சுயஷரூபம் தெரியாமல் இன்னும் ஏமாறிக் கொண்டுதான் இருக்கினம். ஏதேன் நடக்கும் எண்ட நப்பாசைதான் அவைக்கு. அவை நினைச்சிருக்கினம் ரணில் நல்ல மனுசன் எண்டு. எங்களுக்கு அவர் செய்த ஆகக் கூடிய துரோகம் என்ன எண்டு தெரியுந்தானே? அதைவிட மிக மோசமான துரோகத்தை ஆராலை செய்யேலும்.? அப்பிடிப்பட்ட ஆள் வந்து ஒண்டும் தெரியாதவரைப்போல நடிச்சு ஐஸ்கிறீமைக் குடிச்சிட்டு தனக்கு வாலாட்டிற கொஞ்சம் படையைச் சுத்தி நிக்கவைச்சு அவைக்கு டாட்டா காட்டிப் போட்டுப் போட்டார். வந்ததின்ரை உள் நோக்கம் என்ன எண்டது கடவுளுக்குத்தான் தெரியும். ஆனால் ஒண்டு மட்டும் தெரியும் விக்க பிணை முறி இஞ்சை இல்லை எண்டு. அப்பிடி விக்க வேணுமெண்டால் பனை முறிதான் கனக்கக் கிடக்கு.

ஆரையும் நம்பப்பிடாது. நடக்கிறதைக் கண்டு கொள்ளுவம் எண்டு சனம் இருந்திட்டால் நல்லது. இல்லாட்டி உப்பிடி அரசியல்வாதி யிட்டை ஏமாற வேண்டியதுதான்.

- வில்லங்கம் விநாசி



## இயக்குநர் முக்தா சீனிவாசன் காலமானார்

சென்னை, மே 31

பழம்பெரும் தயாரிப்பாளரும், இயக்குநருமான முக்தா சீனிவாசன் சென்னை தி.நகரில் உள்ள அவரது இல்லத்தில் உடல்நலக்குறைவால் நேற்றுமுன்தினம் காலமானார்.

முக்தா சீனிவாசன் (வயது-88), தமிழ்த் திரைப்பட இயக்குநர் ஆவார். அவர் தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் 100 ஆவது படமான 'சூரியகாந்தி', ரஜினிகாந்த் நடித்த 'பொல்லாதவன்' உட்பட 65 படங்களை இயக்கி உள்ளார். நாயகன் உட்பட ஏராளமான படங்களைத் தயாரித்தும் உள்ளார். இவர் இயக்குநர் மட்டுமன்றி சிறந்த எழுத்தாளரும் ஆவார்.

இந்த நிலையில், உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்ட அவர் உயிரிழந்துள்ளார். (ஆ)

# போதைக் கடத்தல்காரர்கள் 105 பேர் சுட்டுக்கொலை

## பங்களாதேஷில் அதிரடி



டாக்கா, மே 31

பங்களாதேஷில் அதிகரித்து வரும் போதை மருந்து உபயோகத்தைக் கட்டுப்படுத்தும் அரசின் நடவடிக்கையில், இதுவரை 105 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

பங்களாதேஷில் 'யாபா' எனப்படும் தடை செய்யப்பட்ட போதை மருந்துகளின் பயன்பாடு அதிகரித்துள்ளது. அண்டை நாடான மியன்மாரில் இருந்து இந்தப் போதை மருந்துகள் கடத்தப்பட்டு விற்கப்படுகிறது. போதை மருந்து விற்பனையாளர்கள் அதிகம் இளைஞர்களையே குறிவைப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வகை போதை மருந்துகளை ஒழிக்க அந்த நாட்டு அரசு பல்வேறு வழிகளில் முயற்சித்து வருகிறது. அந்த நாட்டுப் பிரதமர் ஷேக் ஹசீனாவின் உத்தரவின் அடிப்படையில், ஆயிரக்கணக்கான போதை மருந்து வியாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், இந்த போதை மாபியாவை ஒடுக்க சிறப்பு அதிரடிப் படையும் அமைக்கப்பட்டது.

இதையடுத்து, கடந்த 14 நாட்களில் போதை மருந்து வியாபாரிகள் பலர் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளனர். நேற்றுமுன்தினம் ஒரு நாள் இரவில் நடத்தப்பட்ட சோதனையில் மட்டும் சுமார் 12 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இதன் மூலம், போதை மருந்துகளைத் தடுப்பதற்கான நடவடிக்கையில் சுட்டுக்கொல்லப்பட்டோரின் எண்ணிக்கை 105 ஆக உயர்ந்துள்ளது.

இந்தச் சம்பவத்துக்கு பங்களாதேஷ் மனித உரிமைகள் ஆணையம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஆ)

## விஸ்வாசத்தில் அஜித்துக்கு இரண்டு ஜோடி!



சென்னை, மே 31

சிவா இயக்கத்தில் உருவாகி வரும் விஸ்வாசம் படத்தில் அஜித்தின் ஜோடியாக நயன்தாரா நடித்து வரும் நிலையில், தற்போது மற்றுமொரு நடிகை ஒருவரும் இணைந்துள்ளார்.

'ராஜா ராணி' திரைப்படத்தில் ஒரு சின்ன வேடம் மூலம் சினிமாவில் அறிமுகம் ஆனவர் சாக்ஷி அகர்வால். தொடர்ந்தும் சின்னச் சின்னப் படங்களில் நடித்த சாக்ஷி காலா படத்தில் ரஜினிக்கு மருமகளாக நடித்திருக்கிறார்.

ரஜினியுடன் நடிப்பதைத் தொடர்ந்து, அடுத்ததாக அஜித்துடன் விஸ்வாசம் படத்திலும் இணைந்திருக்கிறாராம். சிவா இயக்கத்தில் நான்காவது முறையாக அஜித் நடிக்கும் விஸ்வாசம் படத்தில் அஜித்துக்கு ஜோடியாக நயன்தாரா நடிக்கிறார். இதுவரை அஜித்தின் வயதான கதாபாத்திரத்துக்கான படப்பிடிப்பு நடந்தது.

அடுத்த கட்டப் படப்பிடிப்பு மும்பையில் விரைவில் தொடங்க இருக்கிறது. அதில் அஜித் இளமையான தோற்றத்துக்கு மாற இருக்கிறார். அதில் சாக்ஷி அகர்வால் சம்பந்தப்பட்ட காட்சிகள் படமாக்கப்பட இருப்பதாகத் தகவல் வெளியாகி இருக்கிறது. இளமையான அஜித்துக்கு ஜோடியாக சாக்ஷி நடிப்பதாகவும் கூறப்படுகிறது. (ஆ)

# முடிவுக்கு வந்தது வர்த்தகப் போர்

## அமெ. - சீனா ஒப்பந்தம்



வொஷிங்டன், மே 31

சீனா - அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு இடையே நிலவி வந்த வர்த்தகப் போரை முடிவுக்குக் கொண்டுவரும் விதத்தில், இரு நாடுகளும் இடையே வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் ஏராளமான சீனப் பொருட்கள் இறக்குமதியாகின்றன. அமெரிக்காவில் இருந்து சீனாவுக்கும் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஆனால், இறக்குமதிக்கும் ஏற்றுமதிக்கும் இடையிலான வேறுபாடு அதிகரித்து வருகிறது. இதனால், வர்த்தகப் பற்றாக்குறை 375 மில்லியன் டொலராக அதிகரித்தது.

இதையடுத்து, சீன இறக்குமதிப் பொருட்களுக்கு கூடுதல் வரியை அமெரிக்கா விதித்தது. இதனால், இரு நாடுகளுக்கும் பாதிப்பு ஏற்பட்டது. இந்த நிலையில், பிரச்சினைக்குத் தீர்வு காண இரு தரப்பு அதிகாரிகளும் பேச்சுவார்த்தை நடத்தினர். அதன் இறுதியில் இந்த ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

இதுகுறித்து வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், "தொழில்நுட்ப ரீதியாக அமெரிக்கத் தயாரிப்புகளுக்கு இணையாக உள்ள 50 வகை சீனப் பொருட்களுக்கு 25 சதவீத வரி விதிக்கப்படுகிறது. 'மேட் இன் சைனா- 2025' தயாரிப்புகளுக்கும் இந்த வரி விதிப்பு பொருந்தும். வரி விதிக்கப்படும் பொருட்களின் இறுதிப் பட்டியல் எதிர்வரும் ஜூன் மாதம் 15 ஆம் திகதி வெளியிடப்படும். உள்நாட்டுத் தயாரிப்புகளை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என கடந்த மார்ச் மாதம் 22 ஆம் திகதி ட்ரம்ப் அறிவித்தார். இதன் மூலம் வர்த்தகப் பற்றாக்குறையை 375 பில்லியன் டொலர்களில் இருந்து 50 பில்லியன் டொலர்களாகக் குறைக்க திட்டமிட்டுள்ளது. அதற்கேற்ப அமெரிக்காவில் இருந்து இறக்குமதியை அதிகரிக்க வேண்டும் என்றும் ட்ரம்ப் வலியுறுத்தினார். அதன் தொடர்ச்சியாகத் தற்போது வர்த்தகப் பற்றாக்குறையை 100 பில்லியன் டொலர்களுக்கு கொண்டு வர இந்த ஒப்பந்தத்தில் வழி செய்யப்பட்டுள்ளது." என்று கூறப்பட்டுள்ளது. (ஆ)

## புது உயிரினங்கள் கண்டுபிடிப்பு!



பீஜிங், மே 31

சீன விஞ்ஞானிகள் ஆழ்கடலில் நடத்திய ஆய்வின் மூலம் புதிய உயிரினங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கடல்வாழ் உயிரினங்களைக் கண்டுபிடிப்பதற்காக சீனா பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதனடிப்படையில் , சக்தி வாய்ந்த கமரா பொருத்தப்பட்ட தூண்டில்களை கடலில் ஆழம் வரை இறக்கி சீன விஞ்ஞானிகள் ஆய்வு செய்தனர். இதன் போது, தூண்டிலில் இருந்த இரையை உண்பதற்காக வந்த உயிரினங்கள் கமராவில் பதிவாகின.

அவற்றில் 30 உயிரினங்கள் புதிதாக இருப்பது ஆய்வில் தெரிய வந்தது.

இதனைத்தொடர்ந்து, கிழக்கு சீனாவின் ஷாண்டாங் மாகாணத்தில் சர்வதேச கடல் ஆணைய கருத்தரங்கம் நடைபெற்றது. இதில், விஞ்ஞானிகள் ஆழ்கடல் ஆய்வில் கண்டறியப்பட்ட 30 புதிய உயிரினங்கள் தொடர்பான காணொளியை வெளியிட்டனர். அதில் பலவகை மீன்கள் இடம்பெற்றிருந்தன. அவற்றில் செந்நிற இறால்கள், பாம்பு வடிவ ஈல் மீன்கள், பெரிய கண்களுடன் விமானம் போன்று காட்சி தரும் அரிய வகை மீன்கள் இடம்பெற்றுள்ளன. (ஆ)

# மரியா புயலால் 4,600 பேர் சாவு!

## ஆய்வு முடிவில் அதிர்ச்சி

நியூயோர்க், மே 31

போர்ட்டோ ரிகோ தீவில் கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் தாக்கிய மரியா புயலால் 4 ஆயிரத்து 600 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக ஹார்வர்ட் பல்கலைக் கழக ஆய்வு முடிவுகள் தெரிவித்துள்ளன.

அமெரிக்காவின் சுயாட்சி அதிகாரம் பெற்ற போர்ட்டோ ரிகோ தீவைக் கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் மரியா புயல் தாக்கியது. 90 ஆண்டுகளில் இல்லாத வகையில் மிகவும் வலுவான இந்தப் புயல், அந்தத் தீவைச் சின்னாபின்னமாக்கியது. பலத்த காற்றுடன் கனமழையும் பெய்ததால் தீவு முழுவதும் வெள்ளக்காடானது. மின்சாரம் முற்றிலும் துண்டிக்கப்பட்டது. வெள்ளம் சூழ்ந்ததால் சாலைகள் மூடப்பட்டன. பல்லாயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்து தவித்தனர். இந்தப் புயல் மற்றும் மழை வெள்ளத்தில் சிக்கி 64 பேர் உயிரிழந்ததாக அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது. தொடர்ந்தும் மீட்புப் பணிகள் நடைபெற்றன.

இந்த நிலையில், ஹார்வர்ட் பல்கலைக் கழக ஆய்வாளர்கள் மேற்கொண்ட ஆய்வு முடிவுகள் அதிர்ச்சி அளிக்கும் வகையில் அமைந்துள்ளன. புயல் மழையால் இறந்ததாக அரசுத் தரப்பில் கூறிய எண்ணிக்கையை விட 70 மடங்கு அதிகமாக, அதாவது 4 ஆயிரத்து 600 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளமை தெரியவந்துள்ளது.

இவர்களில் மூன்றில் ஒரு பகுதி நபர்கள் மின்சாரத் துண்டிப்பு, வீதித் துண்டிப்பு, போதிய மருத்துவ உதவியின்மை ஆகிய காரணங்களால் உயிரிழந்துள்ளனர் என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஹார்வர்ட் பல்கலைக்கழக ஆய்வறிக்கையை வரவேற்பதாக போர்ட்டோ ரிகோ அரசின் மத்திய விவகாரங்களுக்கான அமைச்சர் கார்லஸ் கூறியுள்ளார்.



'புயல் பாதிப்பு மற்றும் உயிரிழப்புகள் தொடர்பாக ஆய்வு செய்ய ஜோர்ஜ் வொஷிங்டன் பல்கலைக்கழக குழுவையும் நியமித்திருக்கிறோம். அந்தக் குழுவின் ஆய்வு முடிவு விரைவில் வெளியிடப்படும். எதிர்காலத்தில் இயற்கைப் பேரிடர்களை இன்னும் சிறப்பாக எதிர்கொண்டு உயிரிழப்பை தடுக்கும் வகையில் பணிகளை மேற்கொள்வதற்கு இந்த இரண்டு ஆய்வுகளும் உதவியாக இருக்கும்' என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஆ)